வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : நாராயணசாமி

தேதி 08.09.2025 நேரம் மாலை 6.10 மணி

---

**தலைப்புச் செய்திகள்**

- உலகின் முன்னணி அறிவு மற்றும் வர்த்தகக் கேந்திரமாக இந்தியாவை மேம்படுத்த, மக்கள் அனைவரும் ஒருங்கிணைந்து பாடுபட வேண்டும் என குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.
- குடியரசுத் துணைத் தலைவர் பதவிக்கான தேர்தல் வாக்குப்பதிவு, நாளை நடைபெற உள்ளது.
- எல்லாத் துறைகளும் பயன்பெறும் வகையிலான ஜிஎஸ்டி சீர்திருத்தங்களால், குறிப்பாக ஜவுளித் துறையில், அதிக பலன்கள் எதிர்பார்க்கப் படுகின்றன.
- புதுச்சேரியில், மழைக் கால நோய்களில் இருந்து மக்களை பாதுகாக்க, அரசு, எல்லா நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது.

---------------------------

முர்மு (17)

உலகின் முன்னணி அறிவு மற்றும் வர்த்தகக் கேந்திரமாக இந்தியாவை மேம்படுத்த, நாட்டு மக்கள் அனைவரும் ஒருங்கிணைந்து பாடுபட வேண்டும் என , குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார். இன்று புதுடெல்லியில், பொறியியல் ஏற்றுமதி பெருக்க சபையின் பவள விழாக் கொண்டாட்டங்களில் உரையாற்றிய அவர், இந்தியப் பொருளாதாரத்தில் சுயசார்பை மேம்படுத்தி, ஏற்றுமதியை பெருக்குதல் அவசியம் என்றார். உலகப் பொருளாதாரத்தின் ஏற்றத் தாழ்வுகளால், இந்தியப் பொருளாதாரத்தில் ஏற்படும் தாக்கங்களை, குறைந்தபட்ச அளவில் கட்டுப்படுத்துவதே, சுயசார்பு இந்தியா இயக்கத்தின் முக்கிய அம்சம் என்றும், இந்தியாவில், கொரோனா காலத்தில் தொடக்கப்பட்ட, சுயசார்பு இந்தியா முன் முயற்சிகள், தொடர்ச்சியான முறையில் பலன் அளித்து வருவதாகவும், அவர் தெரிவித்தார். உலக வர்த்தகத்தில் உருவாகும் சவால்களை, இந்தியர்கள் தங்களுக்கான வாய்ப்பாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும், இத்தகைய வாய்ப்புகளை நன்கு பயன்படுத்திக் கொள்ளும் திறன், குறிப்பாக,

இந்தியாவின் பொறியியல் துறையில் அதிகம் என்றும் குடியரசுத் தலைவர் மேலும் கூறினார்.

--------------------------

<u>துணைத் தலைவர் தேர்தல் (14)</u>

குடியரசுத் துணைத் தலைவர் பதவிக்கான தேர்தல், நாளை நடைபெற உள்ளது. நாடாளுமன்ற இரு அவைகளின் உறுப்பினர்களும், ஒற்றை மாற்று ஓட்டு முறையில், வாக்குச் சீட்டு மூலம் வாக்களித்து, புதிய குடியரசுத் துணைத் தலைவரை தேர்ந்தெடுக்க உள்ளனர். தற்போது மக்களவையில் 542 உறுப்பினர்களும், மாநிலங்களவையில், 239 உறுப்பினர்களும் உள்ளதால், மொத்தம் 781 எம்.பிக்கள், வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர். இதில் குறைந்தபட்சம் 391 வாக்குகளை பெறக்கூடிய வேட்பாளர் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்படும். குடியரசுத் துணைத் தலைவர் பதவிக்கான தேர்தலில், தேசிய ஜனநாயகக் கூட்டணி சார்பில், திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், இண்டியா கூட்டணி சார்பில், திரு. சுதர்சன் ரெட்டி ஆகியோர், வேட்பாளர்களாக தேர்தல் களத்தில் உள்ளனர். குடியரசுத் துணைத் தலைவர் பதவியில் இருந்து, திரு. ஜெக்தீப் தன்கர், உடல்நலக் காரணங்களால் கடந்த ஜூலை மாதம் ராஜினாமா செய்ததை தொடர்ந்து, தற்போது புதிய குடியரசுத் துணைத் தலைவரை தேர்ந்தெடுக்க, தேர்தல் நடைபெறுகிறது.

--------------------------

<u>மோடி பயிலரங்கு (17)</u>

புதுடெல்லியில், நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள பாலயோகி கலையரங்கில் நேற்று தொடங்கிய, பிஜேபி மற்றும் தேசிய ஜனநாயக கூட்டணி எம்.பிக்களுக்கான, 2 நாள் பயிலரங்கின் நிறைவு விழாவில், இன்று பிரதமர் திரு. நரேந்திர மோடி உரையாற்றுகிறார். சன்சத் காரிய சாலா போன்ற இத்தகைய நிகழ்வுகள், மக்களுக்கு இன்னும் சிறப்பாக பணிபுரிவது எப்படி என்பதை மக்கள் பிரதிநிதிகள் அறிந்து கொள்ள, மிகவும் உதவிகரமாக இருக்கும் என்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி, நேற்று சமூக ஊடகத்தில் வெளியிட்ட பதிவில் கூறினார். அடுத்தத் தலைமுறை ஜிஎஸ்டி சீர்திருத்தங்களை அறிவித்துள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடியை பாராட்டி, இப்பயிலரங்கில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. புதிய சீர்திருத்தங்களால், நாட்டில் உற்பத்தி மற்றும் நுகர்வு அதிகரிக்கும் அதே வேளை, அரசுக் கருவூலத்தின் வருவாயும் அதிகரிக்கும் என்று, இத்தீர்மானம் கூறியது. வணிகர்கள் மற்றும் உற்பத்தியாளர்கள், வரிக் குறைப்பின் பலன்களை விரைந்து மக்களுக்கு வழங்க வேண்டும் என்றும்,

பயிலரங்கில் கேட்டுக் கொள்ளப்பட்டது. குடியரசுத் துணைத் தலைவர் தேர்தலில், வாக்களிக்கும் முறை குறித்தும், எம்.பிக்களுக்கு எடுத்துக் கூறப்பட்டது.

--------------------------

***மாண்டவியா*** 1 (4)

இளைஞர்களுக்கான திறன் பயிற்சி வாய்ப்புகள், மற்றும் வேலை வாய்ப்புகளை பெருக்குவது தொடர்பாக, மத்திய தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை அமைச்சகம், தனியார் நிறுவனம் ஒன்றுடன், புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது.

***மாண்டவியா*** 2 (12)

(வாய்ஸ்)

புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்பாக இன்று புதுடெல்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மத்திய தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா பேசுகையில், வலுவான, சுயசார்பு இந்தியாவை உருவாக்குவதில், வேலை வாய்ப்புகளே, முக்கியத் தூணாக திகழும் என்றார். இதில், அரசும், தனியார் துறையும் ஒத்துழைப்பதால், பலவிதமான வேலை வாய்ப்புகள் இளைஞர்களுக்கு கிடைப்பதுடன், வேளாண்மை, சேவை, உள்கட்டமைப்பு போன்ற முக்கிய துறைகள், வலுப்பெற ஏதுவாகும் என்றும் அவர் கூறினார். வேலை வாய்ப்பு தொடர்பான தேசிய இணைய தளத்தில், 51 லட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் பதிவு பெற்றுள்ளதாகவும், 28 ஆயிரம் சர்வதேச வேலை வாய்ப்புகள் உட்பட, 48 லட்சத்திற்கும் மேற்பட்ட காலி இடங்கள் இணைய தளப் பட்டியலில் இடம்பெற்றுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

--------------------------

***ஜிஎஸ்டி ஜவுளி 1 (8)***

பிரதமர் திரு. நரேந்திர மோடி, சுதந்திர தின உரையில் அளித்த வாக்குறுதியின்படி, மக்களுக்கான தீபாவளி பரிசாக மத்திய அரசு அண்மையில் அறிவித்துள்ள, அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி சீர்திருத்தங்களில், சாதாரண மக்களுக்கான பல்வேறு வரிக் குறைப்புகளும், பொருளாதாரத்தை வலுப்படுத்தும் வகையில், ஜிஎஸ்டி நடைமுறைகளில் திறம்பட்ட பல்வேறு மாற்றங்களும் இடம்பெற்றுள்ளன. எல்லாத் துறைகளும் பயன்பெறும் வகையிலான இம்மாற்றங்களால், குறிப்பாக ஜவுளித் துறையில், அதிக பலன் ஏற்பட உள்ளது.

*ஜிஎஸ்டி ஜவுளி 2 (17)*
(வாய்ஸ்)

ஜவுளித் துறையில், செயற்கை இழை நூல் மீதான 18 சதவிகித ஜிஎஸ்டி, மற்றும், செயற்கை இழைகள் மீதான 12 சதவிகித ஜிஎஸ்டி, 5 சதவிகிதமாக குறைக்கப் பட்டுள்ளது. இதனால், உற்பத்தியாளர்களின் நடப்பு மூலதனச் சுமையும், உற்பத்தி செலவுகளும் குறைந்து, இத்துறையில் உற்பத்தி, மற்றும், வேலை வாய்ப்புகள் அதிகரிக்கும். உடை வாங்குவதற்காக நடுத்தர வர்க்கத்தினர், மற்றும், குறைந்த வருவாய் பிரிவினர் செலவிடும் தொகை குறைந்து, கிராமப்புறங்கள், மற்றும், 2ஆம் நிலை, 3ஆம் நிலை நகரங்களில், துணி வகைகளுக்கான தேவையும் அதிகரிக்கும். இதுஅல்லாது, தரை விரிப்புகள் போன்ற, கைத்தறி துணி ரகங்கள் மீதான 12 சதவிகித சரக்கு மற்றும் சேவை வரியும், 5 சதவிகிதமாக குறைக்கப் பட்டுள்ளது.

பெரும்பாலான துணி ரகங்கள், குறைந்தபட்ட அளவான 5 சதவிகித ஜிஎஸ்டி அடுக்கில் கொண்டு வரப்பட்டுள்ளதால், உள்ளூர் நுகர்வும், ஏற்றுமதியும் ஊக்கம் பெறும் என்று, மத்திய ஜவுளித் துறை அமைச்சர் திரு. கிரிராஜ் சிங் தெரிவித்துள்ளார். செயற்கை இழை துணி ரகங்களின் இறக்குமதியும் குறையும் என்று அவர் கூறியுள்ளார்.

ஜிஎஸ்டி சீர்திருத்தங்களை, ஜவுளித் துறையினரும் வரவேற்றுள்ளனர். ஜிஎஸ்டி கட்டமைப்பில் அறிவிக்கப் பட்டுள்ள

*ஜிஎஸ்டி ஜவுளி 3 (6)*
மாற்றங்களால், வணிகர்களின் வரி இணக்கச் சுமை குறைந்து, ஒட்டுமொத்தமாக நுகர்வோர் பயன்பெறுவார்கள் என்று, ஜவுளி வணிகர்கள் தெரிவித்துள்ளனர்.

ஜவுளித் துறையில், பருத்தி-செயற்கை இழைகள் ஆகிய இரு பிரிவுகளிலும், சமஅளவில் வளர்ச்சியை ஊக்குவிக்க, ஜிஎஸ்டி சீர்திருத்தங்கள், பெருமளவில் உதவும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

---------------------------

*புதுச்சேரி நோய் தடுப்பு* (18)
நடப்பு மழைக் காலத்தில், நீரினால் பரவும் நோய்களில் இருந்து மக்களை பாதுகாக்க, புதுச்சேரி அரசு எல்லா நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. இத்தகைய நோய்களால் பாதிக்கப் பட்டவர்களுக்கு சிகிச்சை அளிக்க, புதுச்சேரி அரசு பொது மருத்துவமனை மற்றும் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில், தனி வார்டு அமைக்கப் பட்டுள்ளது. கிராமப்புற செவிலியர்கள், மற்றும், ஆஷா பணியாளர்கள் மூலம், அனைத்து

பகுதிகளிலும், சுகாதார விழிப்புணர்வு பணிகள், மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நீரினால் பரவும் நோய்களை தடுப்பதற்கான முறைகள் குறித்து, அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், வழிகாட்டு நெறிமுறைகள் பரிந்துரைக்கப் படுகின்றன. நீரை கொதிக்க வைத்து ஆறிய பின் அருந்துதல், மோர், இளநீர், மற்றும் நீராகாரம் எடுத்துக் கொள்ளுதல், அடிக்கடி கை கழுவுதல், நீர் நிலைகளை சுத்தமாக பராமரித்தல், சுகாதாரமற்ற முறையில் விற்கப்படும் திண்பண்டங்கள் மற்றும் பானங்களை தவிர்த்தல் போன்ற வழிமுறைகளை பின்பற்றுவதன் மூலம், மழைக் காலத்தில் நீரினால் பரவும் நோய்களை தடுக்கலாம் என்றும், அதையும் மீறி, வயிற்றுப் போக்கு, வாந்தி, காய்ச்சல் போன்ற அறிகுறிகள் ஏற்பட்டால், உடனடியாக அருகில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை அணுகலாம் என்றும், சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது.

--------------------------

*புதுச்சேரி-சிகிச்சை* (13)

உருளையன்பேட்டை தொகுதியில் அசுத்தமான குடிநீர் வினியோகிக்கப் படுவதாக கூறியும், அதை கண்டித்தும், அத்தொகுதி மக்கள், இன்று, சட்டமன்ற உறுப்பினர் திரு. நேரு தலைமையில், மாசுபட்ட குடிநீர் மாதிரிகளுடன், பொதுப்பணித் துறை அலுவலகத்தை முற்றுகையிடும் போராட்டத்தில் ஈடுபட்டனர். உருளையன்பேட்டை, மற்றும், நெல்லித்தோப்பு தொகுதிகளில், அசுத்தமான குடிநீர் அருந்தியதால் பாதிக்கப் பட்டதாக கூறப்படும் 40க்கும் மேற்பட்டவர்களுக்கு, அரசு மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்படும் நிலையில், அஇஅதிமுக இளையோர் பாசறையின் மாநிலச் செயலர் திரு. தமிழ்வேந்தன், மற்றும் அக்கட்சி நிர்வாகிகள், இன்று மருத்துவமனைக்கு நேரில் சென்று, பாதிக்கப்பட்டவர்களை சந்தித்து ஆறுதல் கூறினர். தேவை உள்ளவர்களுக்கு, உடனடியாக தீவிர சிகிச்சை வழங்கவும் மருத்துவர்களிடம் இவர்கள் வலியுறுத்தினர்.

--------------------------

*புதுச்சேரி மின் துறை* (7)

புதுச்சேரியில், மின்துறை தனியார்மயத்தை கண்டித்து, இன்று ராஜ் நிவாசை முற்றுகையிடும் நோக்கத்துடன் பேரணியாக புறப்பட்டு வந்த இண்டியா கூட்டணி கட்சியினரை, போலீசார் பாதியிலேயே தடுத்து நிறுத்தியதால், நேரு வீதியில் பரபரப்பு ஏற்பட்டது. தடுப்புகளை மீறிச் செல்ல முயன்ற முன்னாள் முதலமைச்சர் திரு. நாராயணசாமி, காங்கிரஸ் -திமுக சட்டமன்ற உறுப்பினர்கள் உட்பட சுமார் 300 பேரை போலீசார் கைது செய்தனர்.

-------------------------

வானிலை (16)

ஆந்திரக் கடலோர பகுதிகளை ஒட்டிய வங்கக் கடல் பகுதிகளில், இன்று வளிமண்டல மேலடுக்கு சுழற்சி நிலவுகிறது. இன்றைய தினம், தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுச்சேரி – காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப் படுகிறது. தேனி, திண்டுக்கல், மதுரை, தஞ்சை, நாகை, திருவாரூர் உள்ளிட்ட மாவட்டங்கள், மற்றும், காரைக்கால் பகுதியில் ஓரிரு இடங்களில், கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும், வானிலை அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. வரும் 14ஆம் தேதி வரை, தமிழகம், மற்றும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில் மழை நீடிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது. சூறாவளிக் காற்றுக்கு வாய்ப்பு அதிகம் உள்ள தமிழக கடலோர பகுதிகள், வங்கக் கடல் பகுதிகள், மற்றும், அரபிக் கடல் பகுதிகளுக்கு, மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளனர். இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில், அதிகபட்சமாக, விருதுநகர் மாவட்டம் கோவிலாங்குளம் உள்ளிட்ட இடங்களில், 7 செ.மீ மழை பதிவாகி உள்ளது. புதுச்சேரியில், 4 செ.மீ மழை பெய்துள்ளது. திருக்கனூரில், 2 செ.மீ மழை பதிவாகி உள்ளது.

-------------------------

புதுச்சேரி மல்யுத்தம் (9)

புதுச்சேரியில், யுனைடெட் அமெச்சூர் மல்யுத்த சங்கம் சார்பில், கடந்த 2 நாட்களாக நடைபெற்ற, மாநில அளவிலான மல்யுத்தப் போட்டிகளில் வெற்றி பெற்ற வீரர்-வீராங்கனைகளுக்கு, உள்துறை அமைச்சர் திரு. நமச்சிவாயம் இன்று, பதக்கங்களை வழங்கி பாராட்டினார். இன்றைய காலகட்டத்தில் இளைஞர்கள், விளையாட்டுகளில் அதிக கவனம் செலுத்துவதன் மூலம், தவறான பாதையில் செல்வதை தவிர்க்கலாம் என்று, அவர் தமது உரையில் கூறினார். அமெச்சூர் மல்யுத்த சங்கத்தின் நிறுவனர்-செயலர் மாஸ்டர் வினோத் உட்பட பலர் இவ்விழாவில் கலந்து கொண்டனர்.

-------------------------